செ. வெ. எண் 721

# செய்தி வெளியீடு – 2.9.2008

## தமிழக மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட நவீன தொழில்நுட்பத்துடன் மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் தமிழக அரசு டாடா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## பயிற்சி நிலையத்திற்கு முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு உலகத் தரம் வாய்ந்த பயிற்சி நிலையம் ஒன்றினை நிறுவி அதன்மூலம் மீன்பிடிப்பதற்கு மாற்று வழிமுறைகளில் மீனவ சமுதாய மக்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கிட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது என ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்,

> “தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதிலும், மீன்களைச் சேதமின்றிப் பதப்படுத்தி விற்பதிலும், நவீன உத்திகளைக் கடைப்பிடித்து அதிக வருவாய் ஈட்டிட வழிவகுக்கும் நோக்கத்தோடு, வெளிநாடுகளில் உள்ளதுபோல, கடலில் கூண்டுகளில் மீன் வளர்த்தல், நண்டு வளர்ப்பு ஆகியவற்றில் தமிழக மீனவர்கள் ஈடுபடவும்; கடல் பாசி வளர்த்தல் மற்றும் மீன் பொருட்களை நல்ல முறையில் பதப்படுத்துதல் ஆகியவற்றை மீனவப் பெண்கள் மேற்கொள்ளவும், தேவையான நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகளை அளிப்பதற்கான “நவீன மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மையம்” ஒன்றை அமைத்திட இந்த அரசு கருதியுள்ளது.
>
> சுனாமி நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட டாடா போன்ற பெரும் தொழில் நிறுவனங்கள், எந்தவித ஆதாயமும் எதிர்பாராமல் தங்களின் சமூகப் பொறுப்பின் மற்றுமொரு அடையாளமாக இதற்கு உதவ முன்வந்துள்ளன. அத்தகைய உதவிகளைப் பெற்று, இந்தச் சிறப்புப் பயிற்சி மையத்தை அரசு அமைக்கும். இதற்கான அரசின் முதற்கட்ட உதவியாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது”

–என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக “மீனவ தொழில்நுட்ப பயிற்சி நிலையம்–ஃபிட் (The Fisheries Institute of Technology

and Training FITT)" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு, 18.7.2008 அன்று தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கத்தில் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மீன் உற்பத்தித் தொழில் முனைவோர் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

இப்பயிற்சி நிலையத்தை அமைத்திட காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், முட்டுக்காடு கிராமத்தில் 1.16 எக்டேர் நிலத்தினை தமிழக அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தினை அமைத்துச் செயல்படுத்தும் திட்டத்திற்கு லாபநோக்கம் எதுவுமின்றி தொழில்நுட்ப உதவி முதலான அனைத்துவகை உதவிகளையும் நல்குவதற்கு டாடா குழுமம் முன்வந்துள்ளது.

டாடா குழுமத்தின் முழு ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (2.9.2008) நடைபெற்றது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப. அவர்களும், டாடா நிறுவனத்தின் சார்பாக திரு. கிருஷ்ணகுமார் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் தொழில்நுட்பப் பங்களிப்பாளரான டாடா நிறுவனம் மீன்பிடித்தல், மீன்பதப்படுத்துதல், கடல்மீன்வளர்ப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றின் செயலாக்கச் செயல்பாடுகள் குறித்து இந்திய மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்களின் உதவியோடு விரிவாக ஆய்வு செய்து திட்டத்தை வடிவமைக்கும்; ஃபிட் சங்கத்தின் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும்; வலைக்கூண்டுகளை அண்மைக்கடல் பகுதிகளில் நிறுவி மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், அதற்கான மீன் குஞ்சுகளைப் பொறிப்பகங்கள்மூலம் உற்பத்தி செய்தல், மீன் வளர்ப்பிற்கான மீன் உணவு தயாரித்தல், மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின் முதல் ஆறு மாத காலத்தில் அலுவலகக் கட்டட வாடகை; ஊர்தி மற்றும் சில்லறைச் செலவினங்கள்; இந்திய மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களிடமிருந்து தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கான செலவினங்கள்; இந்திய வல்லுநர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் பயிற்சிகளுக்கான செலவினங்கள் ஆகியவற்றை டாடா நிறுவனம் மேற்கொள்ளும்.

இத்திட்டத்தின்மூலம் டாடா நிறுவனம் உருவாக்கும் சொத்துக்கள், திட்டம் செயல்படுத்தப்படும்போது தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்படும்.

ஃபிட் சங்கம் தமிழ்நாடு அரசு, மீன்துறை, டாடா நிறுவனம் ஆகியவற்றுக்கும், பயனாளிகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படும்;

இச்சங்கம், மீன் இறங்குதளங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் பதப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை நன்கு பயன்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியினைப் பெற்றுத் தரவும் வழிவகை செய்கிறது.

முட்டுக்காடு கிராமத்தில் பயிற்சி நிலைய மாநில தலைமையகத்திற்குத் தகுதியான நிலத்தினை தேவையான அளவில் இலவசமாக வழங்கியும், கடலோர மாவட்டங்களில் சங்கத்தால் அடையாளம் காட்டப்படும் இடங்களில் மையங்களை நிறுவிட ஏற்பாடு செய்வதுடன், இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பாக இயங்கத் தேவையான நிதியுதவிகளையும் தமிழக அரசு வழங்கும்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம், மீன்வளக் கல்லூரி, தூத்துக்குடி, வனத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், இந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத் தலைவர் டாக்டர் சக்திவேல் ஆகியோர் அடங்கிய குழு இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள் குறித்து முடிவு செய்யும்.

இந்த மீனவ தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆரம்பகட்ட வளர்ச்சிப் பணிக்குரிய செலவினங்களை மேற்கொள்வதற்காக இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கேற்ப, முதற்கட்ட உதவி நிதியாக ஒரு கோடி ரூபாய்க்குரிய காசோலையை முதலமைச்சர் கலைஞர் இச்சங்கத்தின் கௌரவத் தலைவர் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி, திருமதி. கனிமொழி, எம்.பி., தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மீன்வளத் துறை ஆணையர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.